**செய்தி வெளியீடு எண்: 316** **நாள்: 04.06.2019**

**செய்தி வெளியீடு**

கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்களின் பிறந்தநாள் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்களின் 124வது பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சென்னை, திருவல்லிக்கேணி, வாலாஜா பெரிய பள்ளிவாசல் வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் நினைவிடத்தில் நாளை(05.06.2019) காலை 10.30 மணியளவில் மலர் போர்வை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் தமிழக அரசு, தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்தநாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்களின் பிறந்த தினமான ஜூன் 5ஆம் நாள், ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

காயிதேமில்லத் அவர்கள் 1896ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஐந்தாம் தேதி திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பேட்டையில் பிறந்தார். இவரது இயற்பெயர் முகமது இஸ்மாயில் சாஹிப் என்பதாகும். இவருடைய தந்தையார் பெயர் ஜனாப் மௌலவி மியாக்கான் இராவுத்தர். தாயார் ஜனாபா முகையத்தீன் பாத்திமா ஆவார். காயிதேமில்லத் அவர்களின் சமுதாயப்பணி அவரை அரசியலுக்கு இழுத்தது. அரசியல் வாழ்க்கையில் தன் கண்ணியத்தையும் நேர்மையையும் அணு அளவு கூட இழக்காமல் தேசப்பணி, மார்க்கப்பணி, செய்தார். 1947ஆம் ஆண்டு இந்தியா–பாகிஸ்தான் என்று நாடு இரண்டாகப் பிரிக்கப்பட்டபோது, இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் அமைப்பாளராக நியமிக்கபட்டார் காயிதேமில்லத். மூதறிஞர் இராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், பேறறிஞர் அண்ணா ஆகிய மேதைகளின் சிறந்த நண்பராக விளங்கினார். 1946ஆம் ஆண்டில் சென்னை சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்திய விடுதலைக்குப்பின், 1952ஆம் ஆண்டு வரை சென்னை மாநில சட்டமன்ற எதிர்கட்சித் தலைவராக இருந்தார்.

காயிதேமில்லத் அவர்கள் பிறந்ததோ தமிழகம். ஆனால், அவர் நாடாளுமன்றத் தேர்தலில் கேரள மாநிலம் மஞ்சேரி தொகுதியில் 1962, 1967, 1971 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1962ஆம் ஆண்டு சீனத் தாக்குதல் வந்தபோது அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். தன் சம்பளத்தின் பெரும்பகுதியை யுத்த நிதிக்கு தானம் செய்தார். பாராளுமன்றக் கூட்டத்துக்கு காயிதேமில்லத் சென்று இருந்த சமயம், அவர் உடல்நலம் பாதிக்கப்பட்டு 1972ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ஆம் தேதி இயற்கை எய்தினார்.

தமிழக அரசின் சார்பில், கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்களின் 124வது பிறந்தநாளை முன்னிட்டு நாளை(05.06.2019) காலை 10.30 மணியளவில், சென்னை, திருவல்லிக்கேணி, வாலாஜா பெரிய பள்ளிவாசல் வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் நினைவிடத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத்தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் மலர் போர்வை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**